அரசாங்க நிர்வாகச் சுற்றிக்கை:12/2005

எனது இலக்கம் : தா7/4/1/22
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.07
2005, மே மாதம் 18 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

**2005 ஆம் ஆண்டின் வரவுசெலவு திட்டத்தில் அரச அலுவலர்களுக்காக உத்தேசிக்கப்பட்ட புதிய காப்புறுதி திட்டத்தைத் ஸ்தாபித்தல். (அக்ரஹார)**

2005 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டப் பிரேரணைகள் மூலம் அரசாங்க அலுவலர்களுக்கு சமமானதும் அதிக நலன்கள் உடையதுமான காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. அதன்படி 1997.01.31 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 5/97 இற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்குப் பதிலாக பின் குறிப்பிடப்படும் பங்களிப்புக் காப்புறுதித் திட்டம் 2005.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

03. இக் காப்புறுதித் திட்டம் பின் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 03 பிரிவுகளைக் கொண்டிருக்கும்.

I. மருத்துவக் காப்புறுதித் திட்டம்
II. தனிநபர் திடீர் விபத்துக்கள் மற்றும் இயற்கை மரணங்கள் தொடர்பான காப்புறுதி
III. கடன் உறுதியளிப்புக் காப்புறுதி.

**04. தகைமைகள்**

நிரந்தர ஓய்வூதியமுடையதும்/பங்களிப்பு ஓய்வூதியமுடையதுமான பதவிகளில் இருக்கும் அரசாங்க மற்றும் மாகாண அரச சேவையில் உள்ள சகல அலுவலர்களும் இதற்குத் தகைமை பெறுவார்கள்.

**05. தவணைக் கட்டணம் செலுத்துதல்**

1. அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையில் உள்ள சகல அலுவலர்களும் இப் பங்களிப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு பங்குகொள்ளுதல் அத்தியாவசியமாகும். அதற்காக அவர்களது மாதாந்தச் சம்பளத்தில் ரூ.75% வீதமான தவணைக் கட்டணம் அறவிடப்படுவதுடன், அத் தவணைக் கட்டணம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

11. அரசாங்கம் ஒரு அலுவலருக்காக மாதாந்தம் 69/- ரூபாவை மாதாந்தம் உதவு தொகையாக செலுத்தும்.

111. இக் காப்புறுதித் திட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள அரச அலுவலர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வருடாந்தம் அரசினால் செலுத்தப்படும் மொத்த உதவு தொகையை மாதாந்த தவணைக் கட்டணமாக திறைசேரியினால் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

1V. ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வரையறுக்கப்பட்ட காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு மாதாந்தம் அனுப்பப்படுகின்ற தவணைக் கட்டணத் தொகைகள், அங்கத்தவர்களின் எண்ணிக்கைகள் என்பன தொடர்பான அறிக்கைகள் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## 06. நலன்கள்

மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் கிடைக்கும் நலன்கள் இணைப்பு (1) இன் பகுதி 1 இலும், தனிநபர் திடீர் விபத்துகள் மற்றும் இயற்கை மரணங்கள் தொடர்பான காப்புறுதியின் நலன்கள் பகுதி 11 இலும், கடன் காப்புறுதியின் நலன்கள் பகுதி 111 இலும் காட்டப்பட்டுள்ளது.

அலுவலர் சட்டவிரோதமற்ற செயற்பாடொன்றில் ஈடுபடும் போது திடீர் விபத்துகளுக்குள்ளானால் மாத்திரமே தனிநபர் திடீர் விபத்துகள் காப்புறுதி மற்றும் கடன் உறுதியளிப்புக் காப்புறுதி உரித்துக்களை பெறுவர். பணிநீக்கம் செய்தல்/ வெளிநாட்டு லீவுகளைப் பெறுதல், (கடமையின் பொருட்டு வெளிநாட்டு லீவுகளை தவிர்த்து) சம்பளமற்ற லீவுகளை பெறுதல்/ வெளிநாட்டுத் தொழிலொன்றில் ஈடுபடுதல்/ இராஜினாமாச் செய்தல், அல்லது சேவையை வெறிதாக்குதல் போன்ற சந்தர்ப்பங்களில் தனிநபர் திடீர் விபத்துக்கள் காப்புறுதி மற்றும் கடன் உறுதியளிப்புக் காப்புறுதிக்கான உரித்துக்களைப் பெறுவதற்கு உரித்தற்றவராவர்.

சம்பளமற்ற உள்நாட்டு லீவுகளைப் பெறும் அலுவலர்கள் தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு பொருத்தமான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தால் மட்டுமே அவர்களுக்கு உரித்துகள் வழங்க முடியும்.

## 07. காப்புறுதித் திட்டத்தின் கீழ் நலன்களைப் பெறுதல்.

I. மருத்துவமனையில் அனுமதிக்கப்படுமிடத்து அல்லது திடீர் விபத்தொன்று ஏற்படுமிடத்து அல்லது இயற்கை மரணமொன்று நிகழுமிடத்து 07 நாட்களுக்குள் அதைப்பற்றித் திணைக்களத் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும். சகல மருத்துவக் கட்டணங்களும் மருத்துவமனைப் பற்றச்சீட்டுகளும் உரிய சகல நலன்களும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு திணைக்களத் தலைவர் ஊடாக ஒரு மாதத்திற்குள் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தானபத்தின் பிரதேச அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். உரிய விண்ணப்பத்திற்கு பற்றுச்சிட்டுக்களின் மூலப் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.

II. வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் வாரத்தில் வேலை செய்யும் 10 நாள்களுக்குள் இந் நலன்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

III. நோயாளர் மருத்துவமனையொன்றில் தங்கியிருந்து சிகிச்சைப்பெறின் வீட்டுக்கு அழைத்து வருவதற்கு முன்பு பின் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கங்களுக்கு கட்டாயமாக அறிவித்தல் வேண்டும்.

011-2357357
011-2357000

IV. முதன் முறையாக நலன்களை பெறுவதற்காக விண்ணப்பிக்கும் போது திணைக்களத் தலைவரினால் அண்மையில் சான்றுப்படுத்தி பெற்றுக் கொண்ட பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம் ஒன்றினை வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

## 08. பொய்யான ஆவணங்களை சமர்ப்பித்தல்

1. எவரேனுமொரு அலுவலர் பொய்யான பற்றுச்சீட்டுப் (பில்) பத்திரங்களையோ அல்லது மருத்துவச் சான்றிதழ்களையோ சமர்ப்பித்திருப்பின் வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அது தொடர்பான அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அறிவித்தல் வேண்டும்.

II. அவ் அறிக்கைகளின்படி, அங்கத்தவருக்கு உரிய திணைக்களத் தலைவர் ஊடாக, அவருக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுக்கும்.

III. அலுவலர் குற்றவாளியாக கருதப்படுவாரானால், தாபன விதிக்கோவையின் தொகுதி 11 அத்தியாயம் XLVIII இன் ஏற்படுகளுக்கும், தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

09. எவரேனுமோர் அலுவலர் அரச சேவையிலிருந்து இராஜினாமாச் செய்தல் அல்லது இளைப்பாறுதல் அல்லது பதவி வெறிதாக்குதல் அல்லது பணிநீக்கம் செய்தல் ஆகிய எந்தவொரு முறையிலாவது அரச சேவையில் இருந்து விலகியிருந்தால் இக் காப்புறுதி நலன்களை இழப்பதற்கு ஆளாவர். அவ்வாறான அலுவலர்கள் தொடர்பான அறிக்கையினை தாமதமின்றி வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பி வைப்பதற்கு திணைக்களத் தலைவர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

10. வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் மாதாந்தம் மீளளிப்புச் செய்யப்படும் செலவு அறிக்கைகள், அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு பொதுத்திறைசேரிக்கு மூன்று மாதங்களுக்கொரு முறை சமர்ப்பிப்பதற்கு நடவக்கை எடுத்தல் வேண்டும்.

11. ஏற்கனவே உள்ள அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் அரசாங்க அலுவலர்களின் கடன் காப்புறுதி உறுதியளிப்புகளைப் பிணையாக வைத்து பெற்றுக் கொண்ட கடன் தொகையையும் இப் பங்கேற்புக் காப்புறுதித் திட்டத்தின் புதிய ஏற்பாடுகளின் கீழும் அவ்வாறே செயற்படும்.

12. 2005.05.01 ஆந் திகதி வரையில் நலன்களை பெற்றுக் கொள்வதற்கான உரிமைப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கு 2005.01.01 ஆந் திகதி வரையிலான சலுகைக் காலமும் உரித்தாகும். அவ்வாறே நலன்களுக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றவுடன் அவற்றை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிப்பதற்கு திணைக்களத் தலைவர் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம் : டி.திசாநாயக்க
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு

**இணைப்பு 1**

**பகுதி 1**

**மருத்துவக் காப்புறுதி திட்டம்**

| | நன்மைகளின் வகுதி | எல்லை |
|---|---|---|
| 1 | மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைக் கட்டணங்கள் | ரூ.21,000.00 நாளொன்றுக்கு அறைக் கட்டணம் ரூ.1500/படி |
| 2 | மருத்துவ நிபுணர் ஆலோசகர்களின் சிபாரிசுகளுக்கு இணங்க வழங்கப்படும் விசேட சிகிச்சையளிப்புக்கள், தாதி சேவைகள் மற்றும் மருத்துவமனைகள் என்பவற்றின் விசேட சிகிச்சையளிப்புகளுக்கான மருத்துவ மற்றும் சத்திர சிகிச்சை செலவுகளும், சத்திர சிகிச்சைக் கூடக் கட்டணங்களும், சத்திர சிகிச்சையளிப்புகளுக்கான சத்திர சிகிச்சை மற்றும் மயக்கமூட்டல் மருத்துவர்களின் கட்டணங்கள் | ரூ.50,000.00 (ஒரு குடும்பக் கூறுக்காக) |
| 3 | ஏற்றுக் கொள்ளப்பட்ட மருத்துவரொருவரின் அல்லது மருத்துவ சேவை கட்டளைச் சட்டம் 41 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவரொருவரின் பரிந்துரைகளின்படி மருத்துவமனையொன்றில் அல்லது தனியார் மருத்துவமனையொன்றில் தங்கியிருந்து சிகிச்சைப் பெறுகையில் செலவாகும் மருத்துவ ஆலோசனைச் சேவைகள் அல்லது மருத்துவ நிபுணர் கட்டணங்கள். | ரூ.15,000.00 ( ஒரு குடும்பக் கூறுக்காக) |
| 4 | நுணுக்கமான சிகிச்சையளிப்புகள் கதிர் ஒளிகள், ரேடியம் பரிசோதனைகள், மற்றும் சிகிச்சையளிப்புகள் மின்சிகிச்சையளிப்புகள், தேக சிகிச்சையளிப்புகள் உட்பட நிபுணர் சேவை கட்டணங்கள். | ரூ.20,000.00 ( ஒரு குடும்பக் கூறுக்காக) |
| 5 | மேலே 1லிருந்து 4 வரையிலான நலன்கள் உரித்தாகும் ஒருநபரின் திடீர் நோயொன்றின் போது அவரது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வதிவிடத்திலிருந்து மிக அண்மையிலுள்ள அரசாங்க மருத்துவமனைக்கு அல்லது தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல நேரிடின் பிரயாணக் கட்டணங்களுக்காக. | ரூ.1500.00 ( ஒரு குடும்பக் கூறுக்காக) |
| 6 | மேலே குறிப்பிடப்பட்ட இலக்கம் 01 லிருந்து 05 வரையிலான சந்தர்ப்பங்களுக்கு<br>(அ) ஒரு சந்தர்ப்பத்திற்கு ஆகக் கூடியது<br>(ஆ) ஒரு வருடத்திற்கு ஆகக்கூடியது | ரூ.100,000.00<br>ரூ.150,000.00<br>(வாழ்க்கைத் துணையும் அரச சேவையில் ஈடுபட்டிருப்பின் ரூ.300,000.00 நலன்கள் உரித்தாகும். |

| | | |
|---|---|---|
| 7 | இலங்கை மருத்துவ சபையில் பதியப்பட்டிருக்கும் அங்கத்தவர்களுக்காக மட்டுமே கண் தொடர்பான விசேட மருத்துவரொருவரின் விதப்புரையின் பேரில் 03 வருடங்களுக்கொரு தடவை மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளுதல் | ரூ.3,500.00 |
| 8 | அரசாங்க மருத்துவமனையொன்றில் அல்லது ஆயுர்வேத மருத்துவமனையொன்றில் தங்கியிருந்து சிகிச்சைப் பெறின் அவ் அங்கத்தவர்களுக்காக வழங்கும் கட்டணம் | ரூ. 5000.00 (நாளொன்றுக்கு ரூ.500/-படி) |
| 9 | 1. சாதாரணமான குழந்தை பிரசவம் அல்லது இயற்கை கருச்சிதைவுக்குள்ளான தனியார் அல்லது அரச மருத்துவமனையொன்றில் தங்கியிருந்தால் முழு வாழ்விலும் ஆகக் கூடியது இரண்டு தடவைகளுக்கு வழங்கும் கட்டணம்<br>11. அங்கத்துவம் பெற்றுள்ள பெண் அலுவலருக்காக தனியார் மருத்துவமனையொன்றில் நிகழ்கின்ற ஒரு குழந்தை பிறப்புக்காக முழு வாழ்விலும் இரு தடவைகள் வழங்கும் கட்டணம் | நாளொன்றுக்கு ரூ.500/-படி ஆகக்கூடிய 05 நாட்களுக்கு<br>நாளொன்றுக்கு ரூ.1,000.00 படி ஆகக்கூடிய 05 நாள்களுக்கு |
| 10 | 1. குறிப்பிடப்படும் இருதயத்துடன் சம்பந்தப்பட்ட சத்திரசிகிச்சைகளுக்குள்ளாகும் அங்கத்தவர்களுக்கு மீளளிப்புச் செய்யும் ஆகக் கூடிய தொகை (ஆகக் கூடிய)<br>1. Heart Attack - (Myocardial Infaraction)<br>2. Coronary Artery Disease ( Coronary by-pass Surgery)<br>3. Stroke (Cerebra Vascular Accident)<br>11. பின்குறிப்பிடப்படும் சத்திர சிகிச்சைகளுக்குட்படும் அங்கத்தவர்களுக்கு வழங்கும் (ஆகக் கூடிய தொகை)<br>1. Cancer<br>2. Rental Failure<br>3. Major Organ Transplant, such as lung or bone marrow, However this benefit will not be paid to a doctor of a major organ<br>4. Paralysis<br>5. Multiple Sclerosis<br>6. Primary Pulmonary Arterial Hypertension<br>7. Fulminate Hepatitis | ரூ.350,000.00<br>ரூ.100,000.00 |

குடும்ப அலகு

திருமணமான அலுவலர்கள் :- அங்கத்தவர், வாழ்க்கைத்துணைவர் மற்றும் தொழிலற்ற திருமணமாகாத அத்துடன் தங்கிவாழும் 21 வயதுக்கு குறைந்த பிள்ளைகள்

திருமணமாகாத அலுவலர்கள்:- அங்கத்தவர் மற்றும் 70 வயதுக்கு குறைந்த அங்கத்தவர்களின் பெற்றோர்கள்.

பகுதி 2

**<u>தனிநபர் திடீர் விபத்துகளுக்கான பாதுகாப்பளிப்புகள்/இயற்கை மரணங்களின் காப்புறுதி</u>**

அரச சேவையில் மாகாண அரச சேவையில் நிரந்தர ஓய்வூதியம் உரித்துடைய/ பங்களிப்பு ஓய்வூதியம் உரித்துடைய சகல அலுவலர்களும் 24 மணித்தியாலங்கள் பூராகவும் இக் காப்புறுதி திட்டத்தின் பாதுகாப்பளிப்பதற்கு உட்படுவர்.

**கிடைக்கும் நலன்கள்**

| | |
|---|---|
| 1. காப்புறுதித் திட்டத்திலான பாதுகாப்பளிப்பு | நாளொன்றின் 24 மணித்தியாலங்கள் பூராகவும் |
| 11. உச்ச வயதெல்லை | 60 வயது வரை |
| 111. பாதுகாப்பளிப்புப் பணம் | ரூ.600,000.00 திடீர் விபத்தொன்றில் மரணம் ஏற்பட்டால் அல்லது நிரந்தர முழுமையான செயலிழப்புக்கு உள்ளானால் பாதுகாப்பளிப்பு பணத்தில் தங்கி வாழ்பவர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும். |
| 1V. செலுத்தப்படும் தொகை | ரூ.600,000.00 |

அ. நிரந்தர செயலிழப்பு

| | |
|---|---|
| திடீர் விபத்தொன்றினால் ஏற்படட மரணத்தின் போது அல்லது நிரந்தரமாக முழுமையான செயலிழப்பின் போது | மொத்த பங்களிப்பு பணம் |

ஆ. நிரந்தர பகுதியளவிலான செயலிழப்பு

| | |
|---|---|
| காலென்றை இழத்தல் ,கண்ணொன்றை இழத்தல், கையொன்றை இழத்தல் போன்ற நிரந்தரமான பகுதியளவிலான செயலிழப்பின் போது | பாதுகாப்பளிப்புப் பணத்தில் 50% |

இ. தற்காலிக முழுமையான செயலிழப்பு

1. 52 கிழமைகளுக்காக - கிழமையொன்றிற்கு ரூபா.300/படி

ஈ. தற்காலிக பகுதியிலான செயலிழப்பு

1. 52 கிழமைகளுக்காக - கிழமையொன்றிற்கு ரூபா.200/படி

உ. இயற்கையாக ஏற்படும் மரணத்தின் போது ரூ.50,000/-

பகுதி 111

<u>கடன் உறுதியளிப்புக் காப்புறுதி</u>

தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் கீழ் அரசாங்க அலுவலர்களால் பெற்றுக் கொண்ட ஆதனக் கடன் தவிர ஏனைய பிணையாளர் ஒருவர் அல்லது பிணையாளர்கள் தேவைப்படும் சகல கடன் வகுதிகளும் இந்தக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் தற்சமயம் அரசுக்குச் சேர வேண்டிய கடன் தொகையை கடனாளிக்கு செலுத்த முடியாதவிடத்து அத் தொகைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அரசுக்குச் செலுத்தப்படும் . இதன் கீழ் அலுவலர் ஒருவர் பிணை வைக்கத்தக்க ஆகக் கூடிய கடன் தொகையானது ரூ.6,000,000/- ஆகும்.

**நலன்கள்**

1. கடன்பெற்றோர் நோய்வாய்ப்பட்டோ அல்லது விபத்தினால் அரைவாசி அல்லது முழுமையான செயலிழப்புக்கு உட்பட்டு ஜீவனோபாயத் தொழிலை இழந்தால் அல்லது உயிர் சேதத்த்திற்கு உள்ளானால் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது கடன் தொகையின் மீதிப் பணத்தை அரசிற்கு செலுத்த வேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்கு உட்படுகிறது.

11. கடன் உறுதியளிப்புக் காப்புறுதியாக ஆகக் கூடிய தொகை ரூ. 600,000/ - ஆவதுடன் அலுவலரின் சம்பளத்திற்கு ஏற்ப அவருக்கு உரிய கடன் தொகை தீர்மானிக்கப்படும்.

111. காப்புறுதித் தொகை - கடன் தொகையின் மீதி நிலுவை

1V. கடன் தொகையை மீளச் செலுத்துதல் - மீளச் செலுத்தும் காலம் 55 வயதிற்கோ அல்லது சேவை நீடிக்கப்பட்டிருப்பின் 60 வயதிற்கோ மேற்படாது இருத்தல் வேண்டும்.